**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,திருச்சுழி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,திருச்சுழி.

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 நாள் திங்கள்கிழமை.

இடைநிலை மனு எண்.1/2021

இன்

அசல் வழக்கு 234/2021

***

சுப்பு ... மனுதார்/வாதி

/எதிர்/

1.பெருமாள்
2. கணேசன்
3. பெருமாள் ... 1 முதல் 3 வரை எதிர்மனுதார்கள்/
1 முதல் 3 வரை பிரதிவாதிகள்

இம்மனு அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 14.12.2020 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 06.01.2021 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்தில் 01.12.2022 ம் தேதியன்று இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கந்தசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் திரு.B.திருப்பதி அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை, இருதரப்பு வாதம் ஆகியவற்றை ஓர்வு செய்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்து வந்த இந்த மனுவில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

1. வழக்கு சொத்தின் இயற்பியல் தோற்றம் மற்றும் அமைப்பை நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் வகுமுறை 26 விதி 9–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

G ABARNA Digitally signed by G ABARNA

**2. <u>மனுதாரர்/வாதி மனுவின் சுருக்கம்</u>:–**

2(1). தபசில் சொத்து மனுதார்/வாதிக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தை வெள்ளையன் மனைவி ராஜம்மாள் தனக்காகவும், தன் மைனர் மக்கள் மூகா, கார்த்திகா மைர்களுக்கு கார்டியனாகவும் இருந்து கடந்த 19.06.2008 ம் தேதியில் மனுதார்/வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். இதன் ஆவண எண்.1403/2008 ஆகும். மனுதார்/வாதி வாங்கிய மொத்த சொத்தின் விஸ்தீரணம் 786 சதுரடி, இதன் மொத்த கிரைய மதிப்பு ரூ.45,200/– ஆகும். மேற்படி மொத்த சொத்தில் 256 சதுரடி அளவுள்ள மண்சுவர் ஓட்டுவாட்ட வீடு உள்ளது. மேற்படி வீடு கட்டியது போக மனுதார்/வாதி வீட்டிற்கு மேற்கே 530 சதுரடி காலியிடமாக உள்ளது. 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி வீடு மனுதார்/வாதி வீட்டிற்கு தெற்கே உள்ளது. 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தன் வீட்டின் வடக்கு மூளையில் மனுதார்/வாதி காலியிடத்தில் கிழமேல் 10 அடி, தென்வடல் 10 அடி ஆக 100 சதுரடியை ஆக்கிரமிப்பு செய்து சுமார் 10 அடி உயரத்தில் ஆலோபிளாக்கல் வைத்து கட்டுமானம் எழுப்பி அதில் ஆஸ்பெட்டாஸ் சீட்டு போட்டு வேய்ந்துள்ளார்.

2(2). தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையோ, பாத்தியமோ சட்டப்படி கிடையாது. மனுதார்/வாதி கடந்த 19.11.2020 மற்றும் 20.02.2020ம் தேதிகளில் காலியிடம் மற்றும் வீட்டை அளந்து காட்டி மனு தாக்கல் செய்ததன் அடிப்படையில் வருவாய்துறை அதிகாரிகள் வந்து அளவை செய்தபோது 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்து இருப்பதாக சர்வேயர் குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதிகள் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. எனவே வழக்கு சொத்தின் இயற்பியல் தோற்றம் மற்றும் அமைப்பை நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல்.

**3. <u>1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி எதிருரையின் சுருக்கம்</u>:–**

மனுதார் தனது மனுவில் தாவா சொத்து 19.06.2008ம் தேதிய கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்து என்றும், மனுதாரருக்கு கிரைய ஆவணப்படி கிழமேல்

G ABARNA Digitally signed by G ABARNA

16 அடி, தென்வடல் 16 அடி ஆக மொத்தம் 256 சதுரடி ஓட்டு வீடும், மீதமுள்ள 530 சதுரடி காலியிடம் உள்ளது என்றும், எதிர்மனுதார் 100 அடியை ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளார் என்றும், சட்ட விரோத கட்டுமானத்தினை ஆணையர் நியமனம் மூலம் அறிய இயலும் என்று கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று இம்மனு தாக்கல்.

**4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை</u>:-**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**5. <u>தீர்முடிவு</u>:-**

5(1). மனு, எதிருரை, ஆகியன பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனு, எதிருரை மற்றும் வாதுரைகளில் இருந்து, வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே வழக்குச் சொத்தைப் பொறுத்து ஆக்கரமிப்பு செய்ததாக எல்லை பிரச்சனை இருப்பது முதல் நோக்கில் தெரியவருகிறது. ஆகையினால் வழக்குச் சொத்தின் நான்கு பக்க எல்லையை நிர்ணயம் செய்ய நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை ஆய்வு செய்து சொத்தின் எல்லையை நிர்ணயம் செய்வது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையினால் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

**<u>இறுதிமுடிவு</u>:-**

6. இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

7. ஆகையினால், வழக்கறிஞர் திரு.R.பாலமுருகன் (Ms.No.4440/2018) அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். அவரது ஊதியமாக ரூ.7,500/- நிர்ணயம் செய்யப்படுகிறது. அத்தொகையினை மனுதார் நீதிமன்ற ஆணையரிடம் நேரடியாக செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தை செலுத்தியதற்கான குறிப்பாணையை மனுதார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

G ABARNA Digitally signed by G ABARNA

8. நீதிமன்ற ஆணையர் பின்வரும் வகையில் செயல்பட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டும்.

1. நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை அடையாளம் கண்டு சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் வழக்குச் சொத்தின் நான்கு பக்க அத்துக்களை அளந்து நிர்ணயம் செய்ய வேண்டும்.
2. வழக்குச் சொத்து பூமியில் எவ்வாறு இருக்கிறது என்பதையும், அதன் ஒட்டுமொத்த இயற்பியல் தோற்றம் குறித்தும் கண்டறிந்து அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.
3. மேற்கண்ட வகைக்கு நீதிமன்ற ஆணையர் செயல்படும்போது தரப்பினர்களின் கிரைய பத்திரங்களையும், வருவாய்துறை பதிவேடு களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.
4. மேற்கண்ட வகைக்கு தேவையான உதவியை நீதிமன்ற ஆணையர் அரசு நில அளவையர் உதவியை நாடிக்கொள்ள வேண்டும்.
5. மேற்கண்ட வகைக்கு தல ஆய்வு செய்ய வேண்டிய நாள் 13.02.2023 மேற்கண்ட வகைக்கு நீதிமன்ற ஆணையர் அறிக்கையை 20.02.2023 ல் தாக்கல் செய்ய வேண்டும்.

அடுத்த வழக்கெடுப்பு நாள்: 20.02.2023

இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023–ஆம் ஆண்டு பிப்ரவரி 06–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ABARNA Digitally signed by G ABARNA

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர்,

திருச்சுழி.